# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ  அதி விசேஷமானது

අංක 2263/36 – 2022 ජනවාරි මස 21 වැනි සිකුරාදා – 2022.01.21

*2263/36 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### காணி சீர்திருத்த ஆணைக்குழு

*1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கக் காணி சீர்திருத்தச் சட்டம்*
*பிரிவு 27 அ (1) இன் கீழான கட்டளை*

*1975 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க சட்டத்தினாலும், 1981 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தினாலும், 1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க சட்டத்தினாலும், 1986 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணி சீர்திருத்தச் சட்டத்தின் 27அ (1) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், மேற்குறித்த ஏற்பாடுகளின் கீழ் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ளதும் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதுமான விவசாய காணிகள், குறித்த காணிச் சீர்திருத்த சட்டத்தின் பிரிவு 22 (1) ஆ ஆ இன் பிரகாரம் 1981 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டுள்ள வீதி அபிவிருத்தி சபைக்கு விற்பனை செய்வதன் மூலம் உரித்தாக்கப்படும்.*

*1) மேற்குறித்த விற்பனைக்காக நிதி முதலீடாக, ரூ. 26, 200,000.00 ஆன (இரண்டு கோடியே அறுபத்தியிரண்டு இலட்சம்) தொகைக்கு குறித்த வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் முன் பட்டியலிடப்பட்ட காணிகளை இக்கட்டளை மூலம் உரித்தாக்கி கையளிக்கின்றேன்.*

| அட்டவணை | காணியின் பெயர் | வரைபட இல. | துண்டு இல. | விஸ்தீரணம் ஏக்கர். றூட். பேர்ச் |
|---|---|---|---|---|
| இல. 01 | அம்பன வத்தை | 10410 | 01 | 01 02 00 |
| இல. 02 | அம்பன வத்தை | 423 | 01 | 02 02 00 |

**சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன,**
*காணி அமைச்சர்.*

காணி அமைச்சு,
'மிஹிகத மெதுர', காணிச் செயலகம்,
இல. 1200/6., ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்ல,
2022, சனவரி 12.

***01 ஆவது அட்டவணை*** *- அம்பன வத்தை*

***காணியின் விபரம்*** : *மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், மீரிகம பிரதேச செயலாளர் பிரிவில், அம்பன கிராமத்தில் அமைந்துள்ள, அம்பன வததை எனும் காணி இது விசேட எண் கொ/ 2402, கொ/ 748, கொ/ 1408, கொ/ 2153 இன் கீழ் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ளது. இக்காணித்துண்டுக்குரிய அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. பி. எஸ். அலஹகோன் அவர்களால் தயாரிக்கப்பட்ட 2019.10.05 ஆந் திகதிய 10410 ஆம் இலக்க வரைபடத்தில் பின்வரும் காணித்துண்டுகளின் பெயர்கள், விஸ்தீரணங்கள் மற்றும் எல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.*

***துண்டு இல. 01 - விஸ்தீரணம் : 01 ஏக்கர், 2றூட், 00 பேர்ச் (0.6070 ஹெக்டயார்)***

| | | |
|---|---|---|
| வடக்கு | : | *அம்பன வத்தைக்காக ஒதுக்கப்பட்ட காணி* |
| கிழக்கு | : | *வீதி (பிரதேச சபை)* |
| தெற்கு | : | *423 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு இல. 1* |
| மேற்கு | : | *வயல்* |

***02 ஆவது அட்டவணை*** *- அம்பன வத்தை*

***காணியின் விபரம்*** : *மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், மீரிகம பிரதேச செயலாளர் பிரிவில், அம்பன கிராமத்தில் அமைந்துள்ள, அம்பன வத்தை எனும் காணி இது விசேட எண் கொ/ 2402, கொ/ 748, கொ/ 1408, கொ/ 2153 இன் கீழ் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ளது. இக்காணித்துண்டுக்குரிய அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. என். ஆர். எல். மெண்டிஸ் அவர்களால் தயாரிக்கப்பட்ட 2019.03.28 ஆந் திகதிய 423 ஆம் இலக்க வரைபடத்தில் பின்வரும் காணித்துண்டுகளின் பெயர்கள், விஸ்தீரணங்கள் மற்றும் எல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.*

***துண்டு இல. 01 - விஸ்தீரணம் : 02 ஏக்கர், 2 றூட், 00பேர்ச் (1.0117 ஹெக்டயார்)***

| | | |
|---|---|---|
| வடக்கு | : | *கடத்திரல் வரைபட இல. 510216 இல் தொகுதி இல. 02 இன் துண்டு இல. 568* |
| கிழக்கு | : | *வீதி* |
| தெற்கு | : | *கடத்திரல் வரைபட இல. 510216 இல் தொகுதி இல. 02 இன் துண்டு இல. 575* |
| மேற்கு | : | *கடத்திரல் வரைபட இல. 510216 இல் தொகுதி இல. 02 இன் துண்டு இல. 568, உத்தேசித்த மத்திய அதிவேக வீதி மற்றும் கடத்திரல் வரைபட இல. 510216 இல் தொகுதி இல. 02 இன் துண்டு இல. 568.* |

EOG 01 - 0223

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.*